


மறைந்த முன்னாள் விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் நா.புகழேந்தி அவர்களின் பிறந்தநாளையொட்டி கழக துணை பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் இல்லத்திற்கு நேரில் சென்று திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றிய செயலாளர்கள் க.மும்மூர்த்தி, தே.முருகவேல், பி.வி.ஆர்.சு.விசுவநாதன், கை.ரா.சடகோபன், நகர செயலாளர் பூக்கடை கணேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் புகழ்.செல்வகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், ஒன்றிய நிர்வாகிகள் தேவகிருஷ்ணன், கலியமூர்த்தி, சடகோபன், ஆறு.சங்கர், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் Ra.சதிஷ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் செல்வி, மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.

## ஒரே வாரத்தில் தொகுதி மறுவரையறை விவகாரத்தில்

# பல்டி அடித்திருக்கிறார் முதலமைச்சர் விஜய்!

## தி.மு.க. ஐ.டி.விங் விமர்சனம்!




*தொகுதி மறுசீரமைப்பை ஆதரிப்பவர்கள் தமிழ்நாட்டின் ‘எட்டப்பர்கள்’ என ராகுல்காந்தி கூறியது இவரைத்தானா?*

*கூட்டணியில் இருக்கும் கட்சிகள் த.வெ.க.வின் இந்த இரட்டை வேட நாடகத்தை கேள்வி கேட்பார்களா? இல்லை இதற்கும் முட்டுக்கொடுப்பார்களா?*

## 717 டாஸ்மாக் கடைகளை மூடி விட்டோம் என

## மூலைக்கு மூலை விளம்பரம் செய்து வரும் த.வெ.க அரசு!

# தமிழ்நாடெங்கும் புதிதாக டாஸ்மாக் கடைகளை சத்தமின்றி அமைத்து வருகிறது!

## தி.மு.க. ஐ.டி.விங் குற்றச்சாட்டு!




**தமிழ்நாட்டில் 717 டாஸ்மாக் கடைகளை மூடி விட்டோம் என மூலைக்கு மூலை விளம்பரம் செய்து வரும் த.வெ.க அரசு – மதுவின் மூலம் வரும் வருமானத்தை உயர்த்த, நிதித்துறை ஆணையத்தின் நிபுணர்குழுவிடம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.**

**அதே நேரம் சத்தமின்றி தமிழ்நாட்டில் மனமகிழ் மன்றங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வரும் நிலையில், தமிழ்நாடெங்கும் புதிதாக டாஸ்மாக் கடைகளை சத்தமின்றி அமைத்து வருகிறது த.வெ.க அரசு.**

**இந்நிலையில், திண்டிவனம் அடுத்த நடுவநந்தல் கிராமத்தில் புதிதாக திறக்கப்பட்டுள்ள டாஸ்மாக் மதுபானக் கடைக்கு எதிர்ப்பு தெரிவித்து கிராம மக்கள் போராட்டம் நடத்திய 70க்கும் மேற்பட்டோரை வலுக்கட்டாயமாக கைது செய்துள்ளது காவல்துறை..**

**ஒவ்வொரு செயல்பாடுகளிலும் இரட்டை வேட நாடகம் போடுவதை இனியேனும் முதல்வர் நிறுத்த வேண்டும்; இல்லையெனில் அம்பலப்பட்டு மூக்குடைபட வேண்டியதுதான்!**

# கழகத்தின் கொள்கை - குறிக்கோளும் சனநாயகம் மிளிரும் - சட்ட திட்டங்களும்!

ஒரு நாட்டை வழிநடத்தத் தேவை அரசியல் சட்டம். சட்டம் ஒரு கட்சியை வழிநடத்தத் தேவை கட்சி சட்டதிட்டங்கள். நாட்டிற்கு எப்படி ஒரு அரசியல் சட்டம் (Constitution) தேவையோ அதே போல கட்சிக்கும் சட்டதிட்டங்கள்Party Constitution, அவசியமாகும். பல அரசியல் கட்சிகளின் வரலாற்றில் கட்சிக்கான சட்டதிட்டம் சரிவர இல்லாததால் தான் அவைகளால் நிலைத்து நிற்க முடியாமல் போனது என்பது வரலாறு ஆகும்.

திராவிடர்களின் விடிவெள்ளியாக, வாராது வந்த மாமணியாய் திகழ்ந்த நீதிக்கட்சியின் “கட்சி சட்ட திட்டங்கள் நடைமுறைக்குப் பொருந்தி வராததால் தான் அக்கட்சி ஒரு தேக்கநிலையை அடைய நேரிட்டது” என்று சொல்லப்படுகிறது. அந்த நேரத்தில் நீதிக்கட்சிக்கு தோள் கொடுத்து காப்பாற்றிய பெருமை தந்தை பெரியார் அவர்களையே சாரும். அந்த நீதிக் கட்சியின் நீட்சிதான் திராவிடர் கழகமாக உருப்பெற்று அதன் வழி திராவிடத்தின் திசைகாட்டியாம் திராவிட முன்னேற்றக் கழகம் உதயமானது.

தமிழ்மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும், நீதிக்கட்சியின் சமூகநீதியை, சுயமரியாதை இயக்கத்தின் தன்மான உணர்வை, பெரியாரின் சமூக மாற்றத்திற்கான சித்தாந்தத்தை அரசியல் ரீதியாக சாதித்துக் காட்டவும், அறிஞர் அண்ணா அவர்களால் ஒரு சனநாயக இயக்கமாக தோற்றுவிக்கப்பட்டது தான் திராவிட முன்னேற்றக் கழகமாகும்.

**கழகத்தின் சட்ட திட்டங்கள் வடிவம் பெற்ற வரலாறு**

கழகம் துவங்கிய போது அதை வழி நடத்த சட்டதிட்டம் தேவை என்பதை நன்கு உணர்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், உலகின் பல்வேறு நாடுகளில் இயங்கிய, இயங்கி வந்த கட்சிகளின், அமைப்புகளின், வரலாற்றையும் அக்கட்சிகளின் சட்ட திட்டங்களையும் அறிந்து, பலவாறு ஆய்ந்து, கழக சட்டதிட்ட அமைப்புக்குழுவை அமைத்து, அதன் மூலம் கழகத்திற்கான சட்டதிட்டங்களை உருவாக்கி பொதுக்குழுவின் ஒப்புதலை பெற்று நடைமுறைப்படுத்தினார்கள்.

**கழகத்தின் உச்சபட்ச அமைப்பு பொதுக்குழு**

கட்சியின் அனைத்து நிலைகளிலிருந்தும் பிரதிநிதிகள் இடம்பெறும் வாய்ப்புள்ள அமைப்பு கழகப் பொதுக்குழுவாகும். கொள்கை - குறிக்கோள் விளக்கங்களையும், சட்டதிட்ட விதிகளை இயற்றவும், திருத்தவும், நீக்கவும், பொதுக்குழுவே உரிமை படைத்ததாகும். கழகத்தின் முழு அதிகாரம் கொண்ட அமைப்பு பொதுக்குழுவாகும்.

கழகத்தின் Highest Policy making body கொள்கை வகுக்கும் உயர்அமைப்பு Highest decision making bodyஉரியமுடிவுகள் எடுக்கும் உயர் அமைப்பு The Apex decision making body உயரிய முடிவுகள் எடுக்கும் உச்ச அமைப்பு பொதுக்குழு ஆகும். இதைத்தான் நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் முரசொலி கடிதத்தில் இயக்கத்தின் நலன்,வளர்ச்சி இவற்றை மட்டுமே இலக்காகக் கொண்டு திறந்தமனதுடன் கலந்தாலோசிக்கக் கூடுவதுதான் கழகப் பொதுக்குழு எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

CRITICISM IS NOT WELCOME IF IT IS NOT ACCOMPAINED BY ADVICE என்பதற்கு ஏற்ப அக்கறையோடு கூடிய விமர்சனத்தை “தனித்தும் இணைந்தும், முரண்பட்டும் எழும் அனைத்து நோக்கங்களும் கருத்துகளும், எண்ணங்களும் (views and opinions) விவாதிக்கப்பட்டு பொதுக்குழுவின் ஒருமித்த முடிவுக்கு வந்து, அதன் பின்பு செயலாக்கத்திற்கு நகரும் சனநாயக அமைப்பு தி.மு.க. இயக்கத்தின்KEYPOSTஎனவர்ணிக்கப்படும். கழகத்தலைவர் / பொதுச்செயலாளர் / பொருளாளர் உள்ளிட்டவைகளைத் தேர்வு செய்யும் கழகத்தின் Supreme Body பொதுக்குழு ஆகும். எனவே தான் பொதுக்குழு “கழகத்தின் இதயம்” என வர்ணிக்கப்படுகிறது.

அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த குறிக்கோளுக்கேற்ப தமிழகம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய நான்கு மொழி வழி மாநிலங்களிலும் இந்திய அரசுரிமை, ஒருமுகத்தன்மை, ஒருமுகத்தன்மை, அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்கு உட்பட்டு நெருங்கிய திராவிட கலாச்சார கூட்டுறவு நிலவ பாடுபடுவது. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் முழு நம்பிக்கையும், பற்றுறுதியும் கொண்டு சமதர்மம், சமயச் சார்பின்மை, சனநாயகம், ஆகிய லட்சியங்களில் முழு ஈடுபாடும்,பற்றும் கொண்டு இந்திய நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை,ஒருமைப்பாடு ஆகியவற்றை கட்டிக்காப்பது தான் தி.மு.கழகத்தின் குறிக்கோள் என்றும்,

அறிஞர் அண்ணா வலியுறுத்திய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, தலைவர் கலைஞர் வலியுறுத்திய கழகத்தின் இதயகீதமாம் ஐம்பெரும் முழக்கங்களின் அடிப்படையில் அரசியலில் சனநாயக உரிமைகளைப் பாதுகாத்து ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திடவும், பகுத்தறிவுஅடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப் பணி ஆற்றிடவும், பொருளாதாரத்துறையில் வறுமையை வென்று, சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வு பெற வழி வகை கண்டிடவும் பிறமொழி ஆதிக்கத்திற்கு இடங்கொடாமல் அந்தந்த மாநில மொழிகளை வளர்த்திடவும், அவைகளுக்கான உரிய இடத்தை பெற்றுத்தரவும் மத்திய அரசில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாநிலங்களில் சுயாட்சியும் மத்தியில் கூட்டாட்சியும் (Autonomy for states and Federation at Centre) உருவாகிடவும் தொண்டாற்றுவது என்ற கோட்பாட்டோடு இயங்கும் அரசியல் இயக்கம் தி.மு.க.

**பட்டொளி வீசும் கழகத்தின் இருவண்ணக்கொடியின் நோக்கம்**


**கருப்பு** : திராவிடர்களின் அரசியல், பொருளாதார, சமுதாய வாழ்வில் உள்ள இருண்ட நிலையை உணர்த்தி நிற்கும் அறிகுறியாகும்.

**சிகப்பு** : அம்மூன்று நிலைகளிலும் உள்ள இருண்ட நிலையை படிப்படியாகப் போக்கி ஒளி நிலையை உண்டாக்கவேண்டும் என்பதை காட்டும் அறிகுறியாகும். (டி.எம். பார்த்தசாரதி எழுதிய திராவிட இயக்க வரலாறு பக்கம் 94).இதைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் “காலப்போக்கில் இயக்கத்தின் கொடியில் கருப்பு வண்ணத்தை விட சிகப்பு வண்ணம் அதிகமாகும் காலம் வரும்” என்ற நம்பிக்கையை தெரிவித்தார்கள். கட்சியின் விதிமுறைகளுக்கு உட்பட்டு கட்சியில் சேருவோருக்கு கட்சி அங்கீகார உறுப்பினர் அட்டை வழங்கும் நடைமுறை கொண்டு வரப்பட்டது. கையால் எழுதி பூர்த்தி செய்து பொதுச்செயலாளர் கையொப்பமிட்ட உறுப்பினர் உரிமைச்சீட்டு வழங்கப்பட்டது. இதைத் தான் இன்றும் சில முத்த முன்னோடிகள் என்னிடம் இத்தனை உறுப்பினர் அட்டை உள்ளது. அதில் பொதுச்செயலாளர் அண்ணா கையொப்பமிட்டுள்ளார், நாவலர் கையொப்பமிட்டுள்ளார் என்று தங்களின் முதாதையார் சொத்தின் மூலபத்தி ரத்தைக் காட்டி பெருமைப்படுவதைப் போன்று மகிழ்வதை இன்றும் காணலாம். ஒரு கிளை அமைய தேவைப்படும் உறுப்பினர்களை ஒரே ஊரில் சேர்க்கமுடியாமல், அடுத்தடுத்த ஊர்களில் ஒவ்வொருவராக சேர்த்து கிளைக்கழகம் அமைக்கப்பட்ட வரலாறு கழகத்தின் ஆரம்பகால வரலாறு ஆகும். ஒரு காலக்கட்டத்திற்கு பிறகு கழகத்தின் வளர்ச்சி வேகம் பெற்று ஊர்கிளை தொடங்கி தலைமைக் கழக அமைப்புத் தேர்தல் வரை சனநாயக ரீதியில் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும் அமைப்பாக உருவெடுத்தது.

1974ம்ஆண்டு வரை வட்டக் கழகம் என்றிருந்த அமைப்பு ஒன்றியக் கழகம் என்ற நிலைக்கு விரிவடைந்தது. ஒன்றிய / நகர / பேரூர் / பகுதிக் கழக அமைப்புகள் மூலம் மாவட்டக்கழக நிர்வாகிகள் தேர்வு முடிந்து, பொதுக்குழு உறுப்பினர்கள் பங்குபெறும் பொதுக்குழுவில்தான் கழகத் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர்ஆகிய பொறுப்புகளுக்கான தலைமைக் கழகத் தேர்தல் நடைபெறும்.

தலைவர். பொதுச்செயலாளர், பொருளாளர் பொறுப்புகளுக்கு வேட்புமனு அளித்துவிட்டு பொதுக்குழுவிற்கு வரும் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் உள்ளிட்டோர் பொதுக்குழு உறுப்பினர்களில் ஒரு உறுப்பினராக கீழே அமர்ந்தும், பொதுக்குழு உறுப்பினர்களில் கட்சியின் முத்தவர் ஒருவர் தேர்தல் ஆணையராக மேடையில் அமர்ந்தும் கழகத்தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் பொறுப்புக்கு இன்னின்னார் ஒருமனதாக தேர்வு பெறுகிறார்கள் என அறிவித்த பிறகுதான் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகியோர் மேடைக்குச் சென்று அமரும் உன்னதமான சனநாயக் நடைமுறையை பின்பற்றும் இயக்கம் தி.மு.க.

**குத்தாலம் பி.கல்யாணம்**
*கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர்*



கழகம் துவங்கியபோது நிறுவப்பட்டதுதான் “சட்ட திட்ட உருவாக்கக்குழு” ஆகும். அதன் பிறகு கழகம் பெற்றுள்ள வளர்ச்சிக்கு ஏற்பவும், கழகத்தை வழிநடத்திச் செல்வதில் ஏற்பட்டுள்ள அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டும் கழக அமைப்புகளின் நிர்வாக நடைமுறைகள் மேலும் செம்மையாக அமையும் வகையிலும் அவ்வப்போது அமைவதுதான் கழகத்தின் சட்ட திட்ட திருத்தக்குழுவாகும். கட்சியின் வளர்ச்சிக்குஏற்ப தேவைப்படும் மறுகட்டமைப்பு சட்டதிட்டத் திருத்தங்களின் மூலம்தான் பெறப்படுகிறது.

திராவிட இயக்கத்தில் வேர் நிலை தொடர்பு கொண்ட கட்சி தி.மு.க. திராவிட இயக்கத்தின் அரசியல் வெளிச்சம் தி.மு.க. கொள்கையில் வைரம் பாய்ந்த இயக்கம் தி.மு.க. அரசியல் முதிர்ச்சி யோடு தீவிர அரசியல் கட்சியாக (SERIOUS POLITICAL PARTY) செயல்படும் கட்சி தி.மு.க. கடல் கடந்து வாழும் ஒட்டுமொத்தத் தமிழ் இனத்தின் தார்மீக ஆதரவு பெற்ற ஒரே நம்பிக்கை நட்சத்திரம் தி.மு.க. கொள்கை குறிக்கோளை அடைய அழுத்தமான நம்பிக்கையுடன் பின்பற்றும் கட்சி உறுப்பினர்களை(HARDCORE PARTY MEMBERS) கொண்ட கட்சி.

DMK HAS A STRONG TRADITIONAL VOTE BANK

DMK HAS A STRONG TRADITIONAL SUPPORT **BASE** என்ற மக்களின் நிரந்தரமான ஆதரவை பெற்றுத்திகழும் இயக்கம் தி.மு.க. எனவே தான் தி.மு.க “ஆழமாக வேரூன்றி, பலமான கட்டமைப்புடன் இயங்கும் அரசியல் கட்சி”. DEEPROOTED AND WELLORGANISED POLITICAL PARTY” என்ற பெருமையும் கொண்டது.

1993ம் ஆண்டு வாக்கில் கொடிச்சின்னம் பற்றிய வழக்கில் கழகத்தின் சார்பில் வாதிட்டு வென்ற மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் சொன்னதாக வியப்புடன் அண்ணன் முரசொலி மாறன் பொதுக் குழுவில் சொன்னது:

கலைஞர் தலைமையில் இயங்கும் தி.மு.க தான் உண்மையான தி.மு.க. என்று வாதாடி” கட்சியையும் கொடியையும்” காப்பாற்றிக்கொடுக்க எனக்கு (கபில் சிபலுக்கு) பெரிதும் உதவியது, “கலைஞரின் வியூகமும் கழகத்தின் சட்ட திட்டங்களும்தான் என்பதாகும்” அப்படிப்பட்ட சட்டதிட்டத்தின் வலிமை தான் கழகத்தை ஆற்றல் மிக்க இயக்கமாகக் கட்டிக் காத்து வருகிறது.

பிரிவினை தடைச்சட்டம் கொண்டு வந்தபோது கழக சட்டதிட்டத்தில் இடம் பெற்றிருந்த திராவிட நாடு கோரிக்கையை தவிர்த்து அதற்கு ஈடாக இந்திய அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு இயங்கும் என்ற திருத்தத்தை கொண்டு வந்து கழகத்தை காப்பாற்றிய அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது.

“கழகத்தை அழிக்க சட்டம் கொணர்ந்தனர்: சட்டத்தை திருத்தி கழகத்தைக் காப்போம்” “சூட்சுமம் புரிகிறதா?”தம்பி! என்பதாகும். கல்லணையைப் போல் கழகத்தின் வேரிலேயே சனநாயக நீர்தான் பாய்ச்சப்படுகிறது என்றும். கரிகால் பெருவளத்தான் கட்டியுள்ள வலிமையான பலம் கொண்டது தி.மு.க என்றும் இனமானப் பேராசிரியர் அவர்கள் குறிப்பிட் டுள்ளார்கள்.

திராவிட இயக்கத்தின் இன்றைய நிலைத்த அரசியல் அடையாளம் தி.மு.க. உட்கட்சி சனநாயகத்திற்கு இடமளிக்கும் இயக்கம் தி.மு.க. உட்கட்சி தேர்தலை தொடர்ந்து முறையாக நடத்தி வரும் இயக்கம் தி.மு.க.

அனைத்து சமுதாயத்திற்கும் கட்சி பொறுப்புகளில் உரிய பிரதிநித்துவம் அளிக்கும் கட்சி தி.மு.க. அனைவரையும் உள்ளடக்கிய சனநாயகத்தை (INCLUSIVEDEMOCRACY) யைப் பின்பற்றும் இயக்கம் தி.மு.க அனைத்து சமுதாயத்திடமும் “நட்பு நல்லுணர்வுடன்’ BONHOMIE A FEELING OF FRIENDLYNESS ஆக அணுகும் இயக்கம் தி.மு.க.

MAJORITY SHOULD BE RESPECTED: MINORITY SHOULD BE PROTECTED பெரும்பான்மை சமுதாயத்திற்குரிய மரியாதையை அளித்து சிறுபான்மை சமுதாயத்திற்குப் பாதுகாவலனாக திகழும் இயக்கம் தி.மு.க/ FEDERATION OF ALL எனவே தான் இது அனைத்து சமுதாயங்களையும் உள்ளடக்கிய ஒரு கூட்டமைப்பாக - DMK IS A FEDERATION COMMUNITIES -ஆக விளங்குகிறது. இதைத் தான் அறிஞர் அண்ணா அவர்கள் “தி.மு.க. கழகம் ஒரு சாதாரண இயக்கம் அல்ல. ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்தின் உரிமையை வென்றெடுக்க புறப்பட்ட இயக்கம்” என்றார்கள்.

சரியான கொள்கை மட்டும் போதாது கொள்கையை வென்றெடுக்க ஸ்தாபன உத்திரவாதம் வேண்டும் என்ற மாமேதை லெனின் வரிகளுக்கேற்ப திராவிட இயக்கக் கொள்கைகளை நிறைவேற்றும் அமைப்பாக இயங்கி வருவது தி.மு.க.

**சோம்நாத் சட்டர்ஜியும் கட்சிக் கட்டுப்பாடும்**

நாடாளுமன்ற மக்களவையின் தலைவராக இருந்தவர், மார்க்சிய பொதுஉடைமை இயக்கத்தை சார்ந்த சோம்நாத் சட்டர்ஜி மேற்கு வங்காளத்தை சார்ந்த மார்க்சிய பொது உடைமை வாதி. நாடாளுமன்ற உறுப்பினராக பல ஆண்டுகாலம் இருந்தவர் சோம்நாத் சட்டர்ஜி ஆவார். அரசுக்கு எதிராக வாக்களிக்க சட்டர்ஜிக்கு கட்சிக்கட்டளை(WHIP)பிறப்பிக்கப்பட்டது. சபாநாயகர் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவர் என்ற நிலையை சட்டர்ஜி எடுத்தார். கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். அப்போது CPM கட்சி சொன்னது “திரு சட்டர்ஜி நாட்டின் சட்டத்தை மதித்து நடந்திருக்கலாம். ஆனால் கட்சியின் சட்டம் அதைவிட மேலானது என்பதாகும்.

அப்போது சாட்டர்ஜி “தன் வாழ்வின் மிகக் கடுமையான தருணம் இது” என தனக்குத் தானே சொல்லிக்கொண்டார் என்பது ஒரு கட்சியின் சட்டதிட்டத்தின் வலிமையை உணர்த்தும் நிலையாகும். FLAT ORGANISATION ஒரே தலைமை : அதன் கீழ் கலர் கலராக பதவிகள் இருந்தாலும் அவை அனைத்தும் ஒரே மட்டத்தில் என்ற நிலையில் சனநாயகத்திற்கு உகந்ததாக செயல்படாத கட்சிகள் FLAT ORGANISATION தரைமட்ட நிலையிலேயே உள்ள கட்சிகள் என பார்க்கப்படுகின்றன.

சில கட்சிகளுக்கு அதன் சட்டதிட்டங்களே திருப்பித் தாக்கும் BOOMERANG ஆக அமைந்துவிடுவது குறித்து

1. ஒரு கட்சியின் பொதுச்செயலாளரை “கட்சியில் லட்சக்கணக்கில்? - கோடிக்கணக்கில் ? உள்ள அடிப்படை உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று கூடி தேர்ந்தெடுக்க வேண்டும்”. என்ற நடைமுறை சாத்தியமில்லாத கட்சி சட்டத்தால் ஒரு அரசியல் கட்சி திணறுவதையும், தேர்தல் ஆணையம் முன்பு முன்பு விழி பிதுங்கி நிற்பதையும் அரசியலில் பார்க்கமுடிகிறது.

**கழகமும் சனநாயகமும்**

1956ல் திருச்சி மாநாட்டில் “பொதுச்செயலாளராக தேர்வு பெற்றிருந்த நாவலர் அவர்களை விளித்து வாழ்த்தும் போது “தம்பி வா! தலைமை ஏற்க வா! உன் ஆணைக்கு கட்டுப்பட்டு நடக்கிறோம் வா! என்று கழகத்தின் நிறுவனர் அறிஞர் அண்ணா அவர்கள் அழைத்து கட்சிக் கட்டுப்பாட்டை உணர்த்தினார்கள்.

1967ல் கழகம் மாபெரும் வெற்றி பெற்றது. அறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் அறிஞர் அண்ணா அவர்கள் தான் தமிழகத்தின் முதல்வர் என்று முடிவிருந்தாலும் கழகசட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு CM DESIGNATE என்று ஆகாத நிலையில் பத்திரிக்கை நிருபர்கள் கூட்டத்தில் பங்கேற்று, கழகம் ஆட்சிக்கு வந்தால்என்னென்னதிட்டங்களைநிறைவேற்றும் என்று விளக்கிக் கொண்டிருந்த போது,

**கழக பாரம்பரியம்**

மரபு வழி பாரம்பரியம் உள்ள கட்சி, உறுதி மிக்க அமைப்புகள் உள்ள கட்சி, கொள்கை, கோட்பாடு, குறிக்கோள், நோக்கம், லட்சியம் உள்ள கட்சி அவற்றை இதுவரை சாதனைகளின் வழி தொடர்ந்து நிறைவேற்றியுள்ள கட்சி, தமிழ்ப்பண்பாடு, கலாச்சாரம் மற்றும் அரசியல் உரிமைகளுக்காக போராடிய கட்சி, தடைச் சட்டங்களை கடந்த கட்சி, மிரட்டலுக்கு பயந்து பெயரைத் திருத்தம் செய்யாத கட்சி, நெருக்கடி காலத்தை சந்தித்த கட்சி, நீண்டகாலத் தொடர்போராட்டங்களை நடத்தி அதன் மூலம் தண்டனை பெற்று சிறை நிரப்பிய கட்சி.இது வரை சுமார் 1000 பேருக்கு மேலாக தம் இன்னுயிரை இயக்கத்திற்காக அளித்த தொண்டர்களின் கட்சி, அறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்ட கட்சி, தலைவர் கலைஞரால் வளர்த்தெடுக்கப்பட்ட கட்சி, கழகத்தலைவர் தளபதி அவர்களால் வழிநடத்தப்படும் கட்சி. வரலாற்றை தெரிந்துகொள்ளாத ஒரு சமூகம் வரலாறு படைக்கமுடியாது என்பார்கள்.

**நேற்றைய வரலாற்றை அறிய,**
**இன்றைய வரலாற்றை உணர்ந்து வாழ,**
**நாளைய வரலாற்றை உருவாக்க உதவும் வரலாறு,**
**திராவிட இயக்க வரலாறு - தி.மு.க. வரலாறு ஆகும்.**

நாட்டு நிலை,கழகப் பணிகள், ஆகியவைகளை அவ்வப்போது கழக செயற்குழு ஆராய்ந்து தேவையான முடிவுகளை எடுக்க தலைவருக்கும், பொதுச் செயலாளருக்கும் ஆலோசனைக்கூறும் என்பதற்கு ஏற்ப, பேரறிஞர் அண்ணா, நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர், இனமானப் பேராசிரியர் வழியில், இயக்கத்தின் பணித்தொடர “மாறுதல் ஒன்றே மாறாதது”, என்ற கருத்தின் அடிப்படையில் “களஆய்வு மறுசீரமைப்புக்குழு” பரிந்துரை அடிப்படையில் செயற்குழு கருத்தறிந்து, கழகத்தலைவர் காட்டும் திசையில் பயணித்து கழகத்திற்கு வலுசேர்ப்போம். வெல்வோம்!